முருகப்பெருமான் துணை

**மகான் இசைஞானியர் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**19.11.2021**, வெள்ளிக்கிழமை

1. வினைவழி விதியென வாடும்
விடையறியா கலியுக மக்களே
துணையென அரங்கனை தேடி
திருவருள் தன்னை நாடிவர
2. வருகவே வினைகளை வென்று
வாட்டமகன்று வாழ்வீரெனக்கூறி
கருதியே பிலவ தேளின் திங்கள்
கண்டுரைக்க சூலதிகதி புகர்வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 03ம் நாள், 19.11.2021 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசி
வழங்குவேன் இசைஞானியர் யானும்
பாரதம் மேம்பட உரைத்திடுவேன்
பண்புள்ள தொண்டர்படை கொண்ட
4. கொண்டநல் அரங்கமகானின்
குறைவில்லா ஞான சபை
தொண்டுவழி உலகமெங்கிலும்
தெய்வநெறி பரப்பி வருக
5. வருகவே அரங்கன் அவதாரத்தை
வழிமொழிந்து உலகமக்கள்
முருகா அரங்கா என வேண்டி
முழுமைஞானம் தா என பணிந்து
6. பணிந்து திருவடி தீட்சை அடைந்து
பரிபக்குவ நிலை தந்திட
துணிந்து வேண்டல் வைத்து
தொடர் பூசை செய்து வர
7. வருகவே நிலவுலகம் எங்கிலும்
வடிவேலன் அருள் சக்தி
தருமபலமாக தனித்துவமாகவே
தாமுரைப்பேன் பரவி இனிதே
8. இனிதே பாதுகாப்புப் பெருகும்
இடராக மக்களை அழிக்கும்
கனிவிலா நச்சுக்கிருமி வழி
கண்டமிடர்கள் யாவும் விலகி
9. விலகியே உயிர்பலி துன்பமிலா
வினவிட உலகம் நிம்மதி பெறும்
கலகம் மதமாச்சர்ய துன்பமிலா
கலித்துன்பம் எல்லாம் விலகியோடி

10. ஓடியே எங்கும் பாதுகாப்பு
ஓங்காரன் அருள் பலம்கூடி
கூடியே ஞானவான்கள் தலைமை
குவலயம் எங்கும் பெருகி

11. பெருகியே ஞானவான்கள் ஆட்சி
பேருலகில் ஞான ஆட்சியாக மலரும்
ஆறுமுக அரங்க ஞானிவழிவர
அனைத்துமே மாற்றம் காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–